செ.வெ.எண்: 316/2020 நாள்: 06.08.2020

# புனித அமலராக்கினி பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பரிசுகள் வழங்கி பாராட்டினார்...

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், சூசை நகர் பகுதியில் அமைந்துள்ள புனித அமலராக்கினி பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (06.08.2020) நடைபெற்ற முடிந்த 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்றதை முன்னிட்டு 12 மாணவர்களுக்கு தலா ரூ.12,000/-ம் வீதம் மொத்தம் ரூ.1.44 இலட்சம் மதிப்பிலான பார்வைத்திறன் மாணவர்கள் பயன்படுத்தும் ஸ்மார்ட போன், ஸ்மார்ட் வாக்கிங் ஸ்டிக், கருப்பு கண்காடி, டி-சர்ட் ஆகிய பரிசுப் பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், செய்யாறு வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. கீ. விமலா, சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் செல்வி. மந்தாகினி, முதன்மை கல்வி அலுவலர் திரு. அருட்செல்வம், மாவட்ட கல்வி அலுவலர் (போளூர்) திருமதி. ஆர். கலைவாணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. ஜோதிலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமித்குமார், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. அஜீதா பேகம், அரசு அலுவலர்கள், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சேத்பட்ட வட்டம், சூசை நகரில் செயல்பட்டு வரும் புனித அமலராக்கினி பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மேல்நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு கடந்த 2017-2018 ஆம் கல்வி ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிளை சேர்ந்த மாணவர்கள் கடந்த 2019-2020 ஆம் கல்வி ஆண்டு மற்றும் 2017-2018, 2019-2020 ஆம் கல்வி ஆண்டுகளில் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்று பெருமை சேர்த்து வருகிறார்கள். இந்த 2020-ம் ஆண்டு நடைபெற்ற 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுதிய 12 பார்வைத்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்தும் இங்கு வந்து தங்கி 12-ம் வகுப்பு வரை படித்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு 12-ம் வகுப்பு தேர்வில் இப்பள்ளியை சேர்ந்த பி. ஸ்ரீனிவாசன் 496/600 (திருவள்ளூர் மாவட்டம்), எஸ். மணிகண்டன் 454/600 (வேலூர் மாவட்டம்), சி. சக்திபிரியன் 451/600 (வேலூர் மாவட்டம்), ஆர். ராகவன் 451/600 (திருவண்ணாமலை மாவட்டம்), சி. தாமரைச் செல்வன் 405/600 (சேலம் மாவட்டம்), ஆர். ராஜா 396/600 (நாமக்கல் மாவட்டம்), ஈ. சுபாஷ் 377/600 (வேலூர் மாவட்டம்), கே. சுஜி 368/600 (திருவள்ளூர் மாவட்டம்), ஏ. தேவேந்திரன் 343/600 (திருவண்ணாமலை மாவட்டம்), என். அஜய் 310/600 (பெங்களூர்), எஸ். விமல்ராஜ் 300/600 (திருவண்ணாமலை மாவட்டம்), கே. கணேஷ்குமார் 290/600 (வேலூர் மாவட்டம்), ஆகிய மதிப்பெண்கள் பெற்றுள்ளார்கள். இதில் குறிப்பாக மாணவர்கள் பி. ஸ்ரீனிவாசன், எஸ். மணிகண்டன் ஆகியோர் Geography பாடத்தில் 100/100 மதிப்பெண்கள் பெற்று மாநில / மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இப்பள்ளியில் பயிலும் 75-க்கும் மேற்பட்ட பார்வைத்திறன் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வடை, பாயாசத்துடன் மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாணவர்களுக்கு மதிய உணவு பரிமாரி அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டார். மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் புனித அமலராக்கினி பள்ளியில் பயிலும் பார்வைத்திறன் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ள 75-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பதற்கான முகக்கவசம், சானிடைசர், சோப், Dettol, Hand Wash, டி-சர்ட் ஆகிய பொருட்கள் வழங்கினார். முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் பார்வைத்திறன் மாற்றுத்திறனாளி மாணாவ்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட் போனை இயக்கி காண்பித்தார்கள். மேலும், உணவு அருந்தும் கூடத்திற்கு அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட வாக்கிங் ஸ்டிக் மற்றும் கண்ணாடி அணிந்து மாவட்ட ஆட்சியருடன் சேர்ந்து நடந்து சென்றார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**